13th March 1959]

THE HON. SRI P. KAKKAN : பரிசீலனை செய்து தக்க ஏற்பாடு செய்யப்படும்.

*764 Q.—SRI K. ANBAZHAGAN (on behalf of Sri A. Govindasamy). கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், வீராநந்தபுரம் சேரி மக்களுக்கு மனைக்கட்டு வழங்க வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து மகஜர் வந்ததா ?

(ஆ) அதன் மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The Collector is taking action to assign available lands and tc acquire additional lands.

SRI K. ANBAZHAGAN : விண்ணப்பம் கொடுத்து எவ்வளவு காலம் ஆகிறது ? தாமதம் ஏற்பட என்ன காரணம் என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : புறம்போக்கு நிலங்கள் இல்லாததால் சிறிது தாமதம் ஏற்பட்டாலும்கூட இருக்கும் இடங்களில் எவ்வளவு தூரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் கலெக்டர் அவர்களால் கொடுக்கப்பட்டு வருகிறது.

Mathur-Vairankaval road

*765 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) when the metalling of the Mathur-Vaiarankaval road in Udayarpalayam taluk, Tiruchirappalli district was sanctioned;

(b) if so, why the work has not been taken up till now; and

(c) when it will be completed?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) In 1957–58, Sir.

(b) & (c) The work has been entrusted to the contractor for execution and it is expected to be completed by the end of November 1959.

Viswakarma Associations

*766 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of Viswakarma Associations registered under the Department of Industries in the State;

(b) the number of such associations in Tiruchendur taluk;

(c) the number of applications for the formation of such associations received from Tiruchendur taluk, placewar; and

(d) the action taken on such applications?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No Viswakarma Associations have been registered under the Department of Industries, but 46 Industrial Co-operative Societies have been started for Viswakarmas.

(b) There are two industrial co-operative societies for Viswakarmas in Tiruchendur taluk, one at Sattankulam and the other at Kulasekarapatnam.

(c) & (d) No application for the formation of industrial co-operative Societies for Viswakarmas in Tiruchendur taluk was received.

Palm-gur industries

* 767 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த சமுதாய நலத் திட்ட, தேசிய விஸ்தரிப்பு பிளாக்கு களிலே **Palm-gur-industries** ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(ஆ) மேற்கண்ட **Palm-gur-industries** மூலமாக எத்தனை பேர் களுக்குத் தொழில்கள் கிடைத்திருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement[a] showing the blocks in each district where Palm Gur Development Schemes are undertaken and the number of persons engaged in the industry in each block is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : ஸார், பனை வெல்லத்தை இயந்திரம் மூலமாக உற்பத்தி செய்வதற்கான சாதனங்கள் எந்தெந்த சொஸைடிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றித் தனி கேள்வி வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆற்காடு ஜில்லாவில் சுமார் 2 லட்சம் பனைமரங்களும், 20 ஆயிரம் மரமேறிகளும் இருந்தும்கூட அந்த ஜில்லாவில் ஒரு இண்டஸ்ட்ரிகூட இருப்பதாகத் தெரியவில்லை. அந்த மாதிரித் தொழிற்சாலை ஆரம்பிக்க யாருக்கும் பர்மிஷன் கொடுக்கவில்லையா ? அல்லது கொடுத்து தவறான முறையில் நடந்துகொண்டதால் ரத்து செய்யப்பட்டுவிட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பனை மரம் அதிகமாக இருந்தால் மட்டும் போதாது. இந்த மாதிரிப் பனை வெல்லம் செய்யும் தொழில் தெரிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாராவது முன் வந்தால் வட ஆற்காடு ஜில்லாவில் இந்தத் தொழிலைத் துவக்க ஏற்பாடு செய்யப்படும்.

SRI M. K. SOMASUNDARAM : திருச்செந்தூர், திருநெல்வேலி, ஆகிய இடங்களில் பனை மரமும் அதிகமாக இருக்கிறது. பனை வெல்லம் செய்யும் தொழிலும் அதிகமாக இருக்கிறது. ஆகவே அங்கு அந்தத் தொழிலை இன்னும் அதிகரிக்கச் செய்ய வசதி செய்து கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் முன்வந்தால் கவனிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : அரசாங்கம் அனுமதித்திருக்கிற பனை மரங்களுக்கும் அவர்கள் கணக்குப்படி அதற்கு வரவேண்டிய பனை வெல்லம் மிகக் குறைவாக வந்திருப்பதைப் பார்க்கும்போது அது தவறாக—கள்ளாகப் பயன்படுத்தப்படுகிறது என்று தெரிகிறது. அவ்வாறு கள்ளாகப் பயன்படுத்தாமல் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது ?

[a] Printed as Appendix VI on pages 283-285 infra.